அடல்மிகு கடதட விகடித மதகளி
றநவர தமும் அக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி **செந்திலில்**
அதிபதி எனவரு பொருதிறல் முருகனை
அருள்பட மொழிபவர்
ஆராய்ந்து வணங்குவர் **தேவேந்திர சங்கமே ;**

**நாட்டை (அ)** **தரிசனப் பாடல் –முருகன் தரிசனம்**
**ஆனந்தபைரவி**

ஓலையும் தூதரும் கண்டுதிண் டாட்டல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையும் கட்டிய சீராவும் கையிற் சிவந்தசெச்சை
மாலையும் சேவற் பதாகையும் தோகையும்
வாகையுமே. 85

## துணை

**முருகன் பெருமை – உலகுக்கு உபதேசம்**

**நாட்டை (அ) ஷண்முகப்ரியா**

விழிக்குத் துணை திரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முரு காஎனும்
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
**கோடன்** மயூரமுமே. 86

## வேல் மாறல்

[சனிக்கிழமை, அமாவாசை, கிருத்திகை, சங்கட ஹர சதுர்த்தி முதலிய பெரிய பாராயணமுள்ள விசேட தினங்களில் வேல்வகுப்புக்குப் பதிலாக இந்த வேல்மாறலை ஓதவும்; தனியே இதனைப் பாராயணம் செய்ய விரும்புவோர் 85, 86 எண்ணுள்ள பாடல்களை ஓதி ஆரம்பித்து, பின்பு 89 எண்ணுள்ள பாடலை ஓதி முடிக்கவும். இது மனக்கோளாறு, உடற் கோளாறு, மற்றும் துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்கவல்ல மந்திரம் போன்றது.]

### வேலும் மயிலும் துணை

**திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என**
**துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே !**

*[முதலில் இதையே இருபது முறை ஓதவும்]*

1. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
   கறுத்தகுழல் சிவத்த இதழ் மறச்சிறுமி
   விழிக்குநிகர் ஆகும் (*திரு)

2. திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
   விருத்தன்என் துளத்தில்உறை கருத்தன்மயில்
   நடத்துகுகன் வேலே (திரு)

3. சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
   அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கி எழு
   மறத்தைநிலை காணும் (திரு)

---

* ஒவ்வோரடியின் முடிவிலும் 'திரு' என்ற இடத்தில் "திருத் தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என துளத்தில்உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே"— என முழு அடியையுங் கூற வேண்டும்.

1, 4, 2, 3 — 2, 3, 1, 4 - 3, 2, 4, 1 - 4, 1, 3, 2



4. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் (திரு)

5. பனைக்கைமுக படக்கரட மதத்வள
கஜக்கடவுள் பதத்திடுநிகளத்துமுளை
தெறிக்கவரம் ஆகும் (திரு)

6. சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும் (திரு)

7. துதிக்கும்அடியவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கொர்துணை ஆகும் (திரு)

8. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும் (திரு)

9. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை
இடித்துவழி காணும் (திரு)

10. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்ததென முகட்டின்இடை பறக்கஅற
விசைத்ததிர ஓடும் (திரு)

11. சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் (திரு)

12. தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அருகடுத்திரவு
பகற்றுணைய தாகும் (திரு)

13. பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கஅருள் நேரும் (திரு)

14. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிரம்
நிறைத்துவிளை யாடும் (திரு)

15. சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் (திரு)

16. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை எனச்சிகையில்
விருப்பமொடு சூடும் (திரு)

17. சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் (திரு)

18. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை எனச்சிகையில்
விருப்பமொடு சூடும் (திரு)

19. பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்க அருள்நேரும் (திரு)

20. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிரம்
நிறைத்துவிளை யாடும் (திரு)

21. சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் (திரு)

22. தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும் (திரு)

23. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை
இடித்துவழி காணும் (திரு)

24. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்ததென முகட்டின் இடை பறக்கஅற
விசைத்ததிர ஓடும் (திரு)

25. துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கொர் துணை ஆகும் (திரு)

26. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும் (திரு)

27. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவரம் ஆகும் (திரு)

28. சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும் (திரு)

29. சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கிஎழு
மறத்தை நிலைகாணும் (திரு)

30. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் (திரு)

31. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்த இதழ் மறச்சிறுமி
விழிக்கு நிகராகும். (திரு)

32. திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என துளத்தில்உறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே (திரு)

33. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் (திரு)

34. சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கிஎழு
மறத்தை நிலை காணும் (திரு)

35. திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என துளத்தில்உறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே (திரு)

36. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் (திரு)

37. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும் (திரு)

38. துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கொர் துணை ஆகும் (திரு)

39. சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும் (திரு)

40. பணைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவரம் ஆகும் (திரு)

41. தனித்துவழி நடக்கும் என திடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும் (திரு)

42. சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்ப ஒளிர்
ஒளிப்பிரபை வீசும் (திரு)

43. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்ததென முகட்டின்இடை பறக்கஅற
விசைத்ததிர ஓடும் (திரு)

44. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை
இடித்துவழி காணும் (திரு)

45. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை எனச்சிகையில்
விருப்பமொடு சூடும் (திரு)

46. சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் (திரு)

47. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிரம்
நிறைத்துவிளை யாடும் (திரு)

48. பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கஅருள் நேரும் (திரு)

49. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிரம்
நிறைத்துவிளை யாடும் (திரு)

50. பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கஅருள் நேரும் (திரு)

51. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை எனச்சிகையில்
விருப்பமொடு சூடும் (திரு)

52. சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும் நரர் தமக்கும் உறும்
இடுக்கண்வினை சாடும் (திரு)

53. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்ததென முகட்டின்இடை பறக்கஅற
விசைத்ததிர ஓடும் (திரு)

54. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை
இடித்துவழி காணும் (திரு)

55. தனித்துவழி நடக்கும் என திடத்தும் ஒரு
வலத்தும் இரு புறத்தும்அரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும் (திரு)

56. சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்ப ஒளிர்
ஒளிப்பிரபை வீசும் (திரு)

57. சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும் (திரு)

58. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவரம் ஆகும் (திரு)

59. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும் (திரு)

60. துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கொர்துணை ஆகும் (திரு)

61. திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என துளத்தில்உறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே! (திரு)

62. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் (திரு)

63. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் (திரு)

64. சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கிஎழு
மறத்தைநிலை காணும் (திரு)

**திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே!** 88

**[இதையே இருபது முறை ஓதவும், பின்னர்ப் பாராயண முறையில் 89 எண் உள்ள பாடலை ஓதி முடிக்கவும்.]**

**வேலும் மயிலும் துணை**

அடாணா]

### வேலின் ஆற்றல்

தேரணி யிட்டுப் புரம்எரித்
  தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக்
  கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த
  கடகம் நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர
  லோகம் பிழைத்ததுவே. 89

## திருமுருகாற்றுப்படை – வெண்பா

### வேல் வாங்குக

அடாணா]

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 90

### * வேல்வாங்கு வகுப்பு

அடாணா] [ரூபகம்

*[‘வேல் வாங்கவே’ என்று 64 முறை ஜெபித்து இவ்வகுப்பை ஆரம்பித்தலும், முடித்தலும் வேண்டும்.]*

திடவிய நெஞ்சுடை அடியர் இடும்பை கெடும்படி
  +தீயாம்குறை போய் ஆழ்ந்தது*
செயசெய என்றிசை பரவிய +எங்கள் கொடுங்கலி
  தேசாந்தர மேசாய்ந்தது*
+செயல்உரை நஞ்சுறழ் மயல்உறு நெஞ்சினர் வஞ்சகர்
  தீமான்கதர் தாம்ஏங்கினர்*